DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 84/2020

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | வெங்கடகார்த்திகேஷ்வர் |
| Father / Husband Name | ராமகிருஷ்ணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **09.12.2024**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க ஆவணங்களுடன் வந்துள்ளேன். அழைப்பாணையானது SBI அய்னாவரம் வங்கி கிளை மேளாலருக்கு அனுப்பப்பட்டது. அவர்கள் வேலை பலுவினால் என்னிடம் சாட்சியம் அளிக்க சொல்லி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் SBI மதுராந்தகம் கிளை மேளாலராக பணி புரியும் நான் ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

2. SBI அய்னாவரம் வங்கி கிளையில் எதிரிக்கு வங்கி கணக்கு உண்டு. எதிரி வாதிக்கு காசோலை கொடுத்து அது கார்ப்பரேஷன் வங்கி மதுராந்தகம் கிளையில் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் கிளியரன்சிற்காக SBI அய்னாவரத்திற்கு அனுப்பப்பட்டது. காசோலை கிடைக்கப்பெற்ற பிறகு SBI அய்னாவரம் வங்கியில் Payment stopped by drawer என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது. காசோலை எண் 122802 ஆனது 30.01.2020 தேதியிட்டது ரூபாய் 7 லட்சத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது.